465

பதிவு என்—M 6720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—6 குருகுலம், மாம்பாக்கம் ; விசய, மார்கழி; 1—1—54 தளிர்—11

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

நல்ல நடுநிலைமை

நடுநிலைமை என்பது நல்லதுதான்; அதிலும் 'நல்ல நடுநிலைமை' என்றால், கேட்க வியப்பாகவே இருக்கிறது. ஆசிரியர் திருவள்ளுவரே அப்படி தெரிவித்தால் நாம் என்ன செய்யலாம்! 'நன்றே தகுதி' என்பது அவர் சொல்லாய் இருக்கிறது.

நடுவு நிலைமை தகுதி என்னும் பெயரால் வந்ததே ஒரு வியப்பு! நடுவு நிலைமையும் தகுதியாய் நடைபெற வேண்டும் என்னும் உண்மையை அது குறித்து நிற்கின்றது; அப்படித் தகுதியாய் நடைபெற்றால் 'நல்ல நடுநிலைமை' என்று அதனைச் சொல்லலாம் அல்லவா?

எப்பக்கமுங் கோணாது தன் நிலையில் நிற்பதையே பொதுவாக நடுநிலைமை என்று மக்கள் கருதுவர். இங்கே, கோணாது என்பது உண்மையில் அதனதன் தன்மைக்கு அதாவது அதனதன் அளவுக்கு மாறாகாது ஒத்து நிற்றலை உணர்த்தும். எடுத்துக்காட்டாக ஒன்று கூறலாம். ஒரு நிலப்பரப்பில் சிறியவும் பெரியவுமாக பற்பல மேடுகளும், பள்ளங்களும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். மழை பெய்து வெள்ளம் உண்டாகி அவற்றில் நீர் நிரம்பினால் நீர் மட்டம் சமன் செய்து நிற்கும். அந்தச் சம நிலையே நடுநிலைமை என்பது. அந் நிலையில், சிறியபள்ளங்களில் குறைந்த நீரும், பெரிய பள்ளங்களில் மிகுந்த நீருமாய் அளவு வேறுபட்டு நிற்கும். அதனை வேற்றுமை என்று எண்ணலாமா? இடத்துக் கேற்றபடி ஒத்து நிரம்பியது என்றுதானே எண்ணுவோம். 'சமன் செய்தல்' என்பது சரிபாகமாகப் பாகுபடுதல் அன்று என்பதும், தகுதியாகப் பொருந்துங் கொள்ள இணங்கியமைதலே என்பதும் இதனால் அறிந்துகொள்ளலாம்.

நடுநிலைமை இவ்வாறு எந்நிலையிலும் ஒத்தமைந்து தகுதியாக நடைபெறுமானால் அது 'நல்லநடுநிலைமை' தானே! அது நன்மை பயக்குமேயல்லது தீங்கு பயக்குமா? ஆகவே அத்தகைய தகுதி நன்றேயாம்.

தகுதி யெனவொன்று
நன்றே, பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

தகுதி என ஒன்று நன்றே—நடுவுநிலைமை என்னும் ஓர் அறம் நல்லதே, பகுதியாற் பாற்பட்டொழுகப் பெறின்—பகுதியால் அவ்வப்பிரிவுகளுக்கு ஏற்றபடி இயைபுபட்டு இயங்கப் பெற்றால்.

தக்க குணத்தினால் நடுவுநிலைமை உண்டாதலின், அது தகுதி எனப்பட்டது. ஒவ்வொரு கடமை யொழுக்கமும் அறமெனப்படுமாதலின், ஒன்று என்றதற்கு ஓர் அறமென உரைக்கப்பட்டது. நடுவுநிலைமையை இயக்கத் தெரியாமையாற் சில நோக்களில் அது நல்லது பயவாது என அறியாதார் கருதுவாதலின், அது 'நன்றே' என்றார்.

நடுவுநிலைமை என்பது சமன் செய்யுந் திறமாதலின், நிலைமைக்குத் தக்கபடி அது இணைந்தமைந்து நிற்கவேண்டும் என்றற்குப் 'பகுதியாற் பாற்பட்டு ஒழுகப்பெறின்' என்றார் 'பெறின்' என்றது, அதன் அருமை தோன்ற நின்றது.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு

முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, மார்கழி,	தளிர்
6	1-1-54 வெள்ளி	11

குரல் எழுந்துவிட்டது!

அண்ணாமலை மன்றத்தில் ஆட்சிமொழி மாநாடு

சில ஆண்டுகளுக்கு முன்பு 'தமிழ்' 'தமிழ்' என்று எங்கும் முழக்கங்கள் எழுந்தன! "தமிழர்கள் விழித்துவிட்டார்கள்! தமது மொழியையும் நாட்டையும் ஓம்பும் உணர்ச்சி பெற்றுவிட்டார்கள்!" என்று பலரும் பேசிக்கொண்டார்கள். அம் முழக்கங்களும் அவற்றின் தொடர்பான முயற்சிகளுமெல்லாம் இடையில் மங்கிவிட்டன. அவையெல்லாம் உறக்கங்கலையாத அரைத்தூக்க நிலையில் கனவு மொழிகளாகவும் புரண்டு படுக்கும் போக்கில் தெரிந்த வெற்றுப் புரட்சிகளாகவுமே கழிந்தன.

ஆனால், மீண்டும் உண்மையிலேயே தமிழர்கள் விழித்துவிட்டார்கள்! தம்மிடையேயுள்ள எந்த வகையான சாதி சமயக் கட்சி வேற்றுமைகளையும் மறந்து ஒன்றுபட்டுத் தமது அருமைத் தமிழ் மொழியையும் தாய் நாட்டையும் ஓம்பத் தலைப்பட்டுவிட்டார்கள் என்பது 20-12-53 ஞாயிறு அன்று பிற்பகல் சென்னை அண்ணாமலை மன்றத்தில் கூடிய 'தமிழ் ஆட்சிமொழி மாநா'ட்டில்தான் உறுதியாயிற்று.

உரிமைக்குரல் எழுப்பப்பட்டுவிட்டது. இனி எவராலும் அதனை அடக்கிவிட முடியாது! அரசியல் உரிமை என்றால், அதற்கு அடிப்படை அடையாளமாக இருக்க வேண்டிய தாய் மொழி ஆட்சிக் குரலை, தனக்குமட்டும் என்றில்லாமல், தமிழன் தன் பண்பாட்டின்படி தன்னிலையில் உள்ள எல்லா மொழியாளர்களின் சார்பாகவும் எழுப்பிவிட்டான்! தமிழர்களில் எந்தப் பிரிவினரும் இனி வேறு போக்குகள் காட்டி ஒதுங்கியிருந்துவிட முடியாது. ஒன்றுபட்டே, அதனை ஆதரித்தே தீர வேண்டும். ஒன்றுபடாதவர்களும், நடுநிலை என்று கூறிப் பேசாமலிருப்பவர்களுங்கூடத், 'தமிழர்கள் அல்லர்' என்று ஒதுக்கப்பட வேண்டிய நிலை கட்டாயம் நேரும்.

இவ்வரிய சூழ்நிலையைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் தக்க நேரம் பார்த்து உண்டாக்கிவிட்டார்கள்.

[illegible] மொழி நாடு அரசு சம யும் [illegible] அமைப்புகள் மக்கள் வாழ்க்கையில் படிப்படியாக மேல் மேல் வளர்ச்சியைத் தந்து உயர்த்துபவை; எல்லாவற்றிற்கும் அடிப்படையானது மொழி—தாய் மொழி!

உலக முழுதும் தாய்மொழி வழியே நாடும் அரசும் ஏற்பட்டுவிட்டால் போரும் பிணக்கும் புக வழியில்லை. அவரவர்கள் இயற்கையாகத் தமக்கென அமையும் நாட்டிலே அமைதியாக வாழ்ந்து முன்னேறி ஒருவர்க்கொருவர் ஒப்புரவு செய்து கொண்டு உயரலாம்.

உரிமை உணர்ச்சியும் உண்மை உணர்ச்சியும் தாய் மொழியை அடிப்படையாகக் கொண்டே கிளைக்கும். இது இயற்கை; இதனைத் தடை செய்வது தகாது; முடியவும் முடியாது. இதற்குப் பிறகே மற்றைய வளர்ச்சிகளெல்லாம்; இந்த அடிப்படையின்மேல் அமையும் வளர்ச்சிகளே உண்மை வளர்ச்சிகள் கூட; இந்தியப் பேரரசு ஏனோ இந்த உண்மையை உணராமல், இதற்கு நேர் மாறான பாதையில் போக முயன்றுகொண்டிருக்கிறது.

என்றாலும், நல்ல காலமாக அப் பேரரசின் அமைப்புச் சட்டத்தில் இந்தியாவை மொழி வழி மாநிலங்களாகப் பிரித்துக் கொள்ளவும், அவ்வம் மாநிலங்களில் அவ்வத் தாய் மொழிகளையே ஆட்சி மொழியாக அமைத்துக்

Telegrams: "RAMBROS"

N.Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

கொள்ளவும், ஆங்காங்குள்ள மக்களுக்கு உரிமை தரும் சட்டம் இடம் பெற்றிருக்கிறது. இல்லையென்றாலும், என்றைக்காகிலும் அது இயற்றப்படும் நிலை நேர்ந்தே தீரும்.

இனிச் சட்டத்தில் இடம்பெற்றிருக்கிற உரிமையை உணர்ந்து உரிய காலத்தில் பயன்படுத்திக் கொள்ளாத நிலையில், தன் விருப்பம்போல் செய்யும் அதிகாரமும் இந்தியப் பேரரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆதலின், பிறகு விழித்துப் போராட்டம் செய்வதை விட இப்போதே ஏற்றன செய்து கொள்வதுதான் ஏற்புடைத்து.

மாநில அமைப்பு வகையில் ஆந்திரத் தோழர்களின் கிளர்ச்சி ஒன்றுதான் இதுவரை வெற்றி பெற்றிருக்கின்றது. தாய்மொழி ஆட்சி வகையிலாவது தமிழர்களின் கிளர்ச்சி வெற்றி பெறுமாக! இவ்விருவருடைய வெற்றியும் ஏனைய மொழி மக்களுக்கும் நலம் பயந்து இந்தியப் பேரரசுக்கும் உண்மை இணக்கத்தாலாகும் இணையற்ற வலிவைத் தருமாக!

நிற்க, சட்ட நுணுக்கம் தெரிந்த தமிழப் பெருமகனும், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியும், சென்னை அரசாங்க மேல் சபை உறுப்பினருமான திரு அ. கசபதிநாயகர் அவர்கள் (ஆந்திரம் பிரிந்த சென்னை அரசவையில்) பெரும்பான்மை மக்கள் வழங்கும் நிலை பற்றித் தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று உரிய காலத்தில் சட்டம் கொண்டுவர இருக்கிறார்கள். வாழ்க கசபதியார்! வெல்க அவர்கள் முயற்சி!!

நாடு உரிமை பெற்று ஐந்து ஆண்டுகளாகியும் இதுவரை எந்த சட்டசபை உறுப்பினரும் கருத் திருத்தாத இவ்வடிப்படைத் திருத்தத்தில்கருத்திருத்தித் திரு. கசபதியார் அவர்கள் தமக்கு ஒரு நிலைத்த புகழைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தலைமையில் தமிழ் ஆட்சிமொழி மாநாட்டைச் சிறப்புற நடத்திப் பல அரசியல் கட்சித் தலைவர்களும் சட்டசபை உறுப்பினர்களும், தகுதி வாய்ந்த மக்கள் தலைவர்களும் அறிஞர்களும், கலைஞர்களும் அருளாளர்களும் அதிற் பங்கு கொள்ளுமாறு செய்து சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரும் அப்புகழிற் பங்கு கொண்டிருக்கிறார்கள். இன்றைய தமிழர்களின் பாராட்டுதலும் எதிர்காலத் தமிழகத்தின் நன்றியும் இவர்கட்கு என்றும் உரியதாகும்.

தலைவர் முன்னுரைக்குப் பின் வந்திருந்த பல கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள் மாநாட்டை ஆதரித்துப் பேசினார்கள். தமிழ், தமிழ்நாடு, தமிழன் முன்னேற்றமே தம் மூச்சும் பேச்சுமாகக் கொண்டிலகும் தமிழ்ப் பெருமகன் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் முன்மொழியப் பல கட்சித் தலைவர்களும் பிறரும் வழிமொழிந்து ஆதரிக்கத் தமிழகத்தில் தமிழை ஆட்சி மொழியாக்கும் சட்டத்தை ஆக்குதல் வேண்டும் என்றும், அதனைச் சட்ட சபையின் எல்லா உறுப்பினர்களும் ஆதரித்து நிறைவேற்ற வேண்டும் என்றும் அரசியலாரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேறியது.

மாநாடு நல்ல சார்பாளர்களை (பிரதி நிதித்துவம்) உடையதாகச் சிறப்புற நடந்திருக்கிறது. மக்கள் பெருங் கூட்டமாகத் திரண்டு வந்து ஆதரித்து ஊக்க மூட்டியிருக்கிறார்கள். அதனால் அங்கே நிறைவேறிய தீர்மானம் மக்களாட்சியில், மன்னர்களாக உள்ள மக்கள் திரண்டு அரசியல் பதவியிலுள்ள காவலர்களை நோக்கிப் பிறப்பித்த குரல் என்று சொல்லுவதில் தவறில்லை.

குரல் எழுந்துவிட்டது! காவலர்கள் அதனை நிறைவேற்றுதல் அன்பின் கடமையாகும்! நிறைவேற்றுவிட்டால் விழித்து விட்ட தமிழன் இன்னும் மேன் மேலும் மதர்த்தெழுதலும் கூடும். அரசியலார் கனிவுடன் இவ்வகையில் தம் கடமையைத் தயங்காமல் செய்து நலம்பெருக்குதல் சிறப்பாகும்!

வாழிய செந்தமிழ்!
வாழ்க நற்றமிழர்!!
வாழிய பாரத மணித்
திருநாடு!!!

—ந. ரா. ஆட்லரசு.

Phone 55034. Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு சென்னை 1.

குருகுலச் செய்தி:

முன் வருக!

உலகத்திலேயே மிகச் சிறந்த ஒப்பற்ற ஒரு நூலாய், எல்லோரும் ஏற்கத் தக்க பொது நூலாய் ஒளிர்வது நம் திருக்குறள்! அது தமிழால் அமைந்தது நம்முடைய பெறலரும் பேறு. அது எழுந்து ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் ஆய்விட்டன.

உலகமுழுதும் ஒன்றுதல் வேண்டும், ஒரு குலமாய் ஓராட்சியின்கீழ் அமைதல் வேண்டும், என்று இன்று பேசப்படுகிறது.

இக்குறளை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னேயே எழுப்பிய திருவள்ளுவர், மக்கள் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து நூல் செய்திருக்கிறார். ஆதலின் அந் நூலைச் செயற்படுத்தினால் இன்றைய ஒரே உலகப் பேச்சு முதலியன நிறைவேறும் சூழ்நிலை பிறக்கும்.

ஒரு நூலுக்குச் செயல்முக அமைப்பு என்பது இது வரை அறிந்திராத ஒரு புதிய செய்தி! ஆயினும், அது இன்றியமையாததாய் விட்டது. நல்ல நூல்களின் கருத்தெல்லாம், வாழ்க்கையிற் செயல்முகப் படுவதில்தானே நன்மையிருக்கிறது!

"எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத எப் பொருளும் இல்லையால்" என்று பெயரெடுத்துள்ள திருக்குறளுக்கு ஒரு செயல் முக அமைப்புக் காண்பதைவிட வாழ்க்கைக்கு நன்மையாவது வேறு என்ன இருக்க முடியும்?

திருக்குறள் மன்பதைக் கெல்லாம் பொதுவாக அமைந்து உயர்வழி காட்டலின், மன்பதை உயர்வை விழைவார்க்கெல்லாம் அந் நூலைச் செயற்படுத்த வேண்டியது இன்றியமையாததாயிருக்கின்றது!

இனி, சாதி ஒழிப்பு, சமூக ஒற்றுமை, சமயத் தொண்டு, கல்விப் பணி, கள் ஒழிப்பு, பொருள் துறை வளர்ச்சி, உடல் நலப் பயிற்சி, அரசியற் பணி, முதியோர் கல்வி எனப் பல்வேறு வகையில் மன்பதைத் தொண்டு செய்யும் பல்வேறு பிரிவினரும் முறையே பெருமை, சான்றாண்மை, மெய்யுணர்வு, கல்வி, கள்ளுண்ணாமை, பொருள் செயல்வகை, மடியின்மை, செங்கோன்மை, கல்லாமை என்று பொருந்தக் கூடிய திருக்குறளின் ஒவ்வொரு பகுதியையே, அதனை அறிந்தோ அறியாமலோ, செயற்படுத்தி வருகிறார்கள். அதைவிட அவர்கள் எல்லாரும் ஒன்றுபட்டுத் திருக்குறளையே செயல்படுத்துவது என்னும் முடிவுக்கு வந்துவிட்டால், அது மன்பதைக்குரிய எல்லாத் தொண்டுகளையும் நிறைவேற்றுவதாக அமைந்துவிடும்.

இவ்வகையில், பணியார்வமுள்ள அனைவரையும் கூட்டித் திருக்குறட் செயலகத்தை நிறுவுவதே மாம்பாக்கம் குருகுலத்தின் மாண்பெரு நோக்கமாகும்.

ஆசிரியர் அவர்கள் தாம் முடிவு செய்திருந்தபடி, அக் குருகுலத்தின் அடிப்படைகளிற் பெரும் பகுதி அமைத்துவிட்டார்கள். இன்னும் ஓராண்டுக்குள் தம் கடமையை அதாவது, அதிகாரவாரியாக நிலங்களைப் பிரித்துக் குருகுல நிலப் பரப்பை ஒழுங்கு செய்து, அவ்வவ் வதிகாரங்களையும் எவ்வெவ்வாறு செயற்படுத்தலாம் என்று தெரிவித்துவிடுகிற வரையில், அவர்கள் நிறைவேற்றிவிடுவார்கள்.

அதற்குமேல் வசதியுள்ள குருகுல மாணவர்களே (அல்லாதவர்கள் குருகுல மாணவர்களாக ஆகிவிடலாம்.) அதிகாரத்திற் கொருவராகப் பொறுப்பேற்று, வழிவழியாகத் தொடரும் உரிமையோடு, ஆசிரியர் விதித்துக் கொடுக்கும் வரையறைகளுக்குட்பட்டு அவ்வவ் வதிகாரத்தையும் செயற்படுத்தி வர வாய்ப்பிருக்கின்றது. பொதுவாகக் குருகுல ஆட்சிப் பொறுப்பு, அதிகாரப் பொறுப்பேற்கும் மாணவர்களிடம் இருக்கும். ஆசிரியர் அமைதியாக இருந்து திருவருளைத் தேனித்துக்கொண்டு அவ்வப் போது வேண்டும் குறிப்புகளையும், விளக்கங்களையும், அறிவுரைகளையும் நூல்களையும் வழங்கி வருவார்கள்.

பெறுதற்கரிய இத்தகைய தொண்டின் பேற்றை, பெரிய வாய்ப்பை, வேட்கையும் தகுதியுமுள்ள குருகுல மாணவர்கள் விரைந்து முன் வந்து பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஒவ்வோர் அதிகாரத்திற்குரிய நிலப் பிரிவையும், அதன் செயல் பொறுப்புகளையும், முதலில் முன் வந்து ஏற்பவருக்கே அவர்தம் அன்பையும் ஆர்வத்தையும் மதித்து ஒதுக்கப்பெறுமாதலின், 133 பேருக்கு மேல், (ஏற்றுக் கொள்வார் தாமாக முன் வந்து விதிப்படி இன்னொருவருக்கு மாற்றினால் ஒழிய) அம் மாட்சியைப் பெற வாய்ப்பில்லை. ஆதலின், பிறகு எண்ணி இரங்குமாறு வைத்துக்கொள்ளாமல் அவரவர்களும் இப்போதே தக்க துணிவும் முயற்சியும் கொண்டு முன்வந்து அதிகாரப் பொறுப்புகளை ஆசிரியருடன் கலந்து ஏற்றுக்கொள்வது நல்லது.

நன்றே செய்க! நன்றும்
இன்றே செய்க!!
இன்றும் இன்னே செய்க!!

—ஒளி.

* ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு. கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

அதிகாரம் 13.

தொண்டு

அஃதாவது தொண்டது சிறப்புக் கூறுதல்; இறைவனை வழிபட்டு இறை நிலை எய்துதல், அந்நிலை எய்தாதார்க்குத் தொண்டு செய்தற் பொருட்டாகலானும், தொண்டின் பயனாக வழிபாடு பின்னுஞ் சிறப்புறுதலானும் இது வழிபாட்டின் பின் வைக்கப்பட்டது.

1. பணிந்து பயன் தூக்காப்
பற்றற்ற தொண்டே
அணிந்து பிறங்கிற் றுலகு.

தாழ்ந்து பயன் அளக்காத அவாவற்ற தொண்டினையே உலகம் தனக்கணியாகப் பூண்டு விளங்கிற்று.

சேவையினால் உலகம் விளக்கமுடையதாதலின் பிறங்கிற்றெனவும், சேவை தூயதாயின் அவ்விளக்கமும் அழகுடையதாகலின் அணிந்தெனவும் விதந்தார். தாழ்வுடைமையும் பயனளவாமையும் அவாவுறாமையு முடைய செயல்களே தொண்டெனப்படுமென்பதும் உலகுக்கு அஃது இன்றியமையாததென்பதும் இதனாற் பெறப்பட்டன.

2. துடித்துத் துயர்போக்கித்
தொண்டாற்ற வல்லார்
பிடித்தார் பிறவா நெறி.

விரைந்து பிறர் வருத்தம் துடைத்துத் தொண்டு செய்ய வல்லவரே மீண்டு பிறவா நெறியினைக் கடைப்பிடித்தவராவர்.

அவர்க்குப் பிறவியில்லையென்பது கருத்தாயிற்று. துடித்தல், உளம் பதைத்தல்; உற்ற நேரத்தில் விரைந்து செய்தலுணர்த்திற்று. துயர் போக்கித் தொண்டாற்றுதலெனக் காரணத்தைக் காரியமாகக் கூறினமையும் இக்கருத்தானென்க. பிரிநிலையேகாரம் விகாரத்தாற் றொக்கது. பிறர் துயர் களையு நெறியினரே பிறவா நெறியினரென்பது இதனாற் கூறினார். தொண்டென்பது இன்னதென்பதும் அதன் பயனும் இதனால் விளக்கப்பட்டன.

3. புகழ் வேண்டா, புன்மை
புகவிடா சற்றும்
பகை நோக்காப்
பண்பிற்றுத் தொண்டு.

சிறிதும் புகழ் விரும்பாத, கீழ்மை அணுகவிடாத, பகைமை கருதாத தன்மையுடையது தொண்டென்பது.

பெருந்தன்மை யல்லாததைப் புன்மையென்றார். நிறைவேறுவது நற்செயலாயினும் அதனை நிறைவேற்றும் முறையும் புன்மை கலவாததாய்ப் பகை விளைக்காததாய் நிகழ்தல் வேண்டும் என்பது கருத்து, எச்சங்கள் தனித்தனியாகப் பண்பென்பதைத் தொடர்ந்து நின்றன. சற்றும் என்பதை மூன்னுங் கூட்டுக. இதனால், தொண்டியற்று முறை கூறப்பட்டது.

4. தொண்டுண்டு காத்தளிக்கத்
தோற்றும் உயிர்பலவும்
தொண்டர்க்குக் காப்பேன் பிற.

உலகத்தில் தோற்றுவிக்கப்படும் உயிர்கள் பலவற்றையுங் காப்பாற்றியுதவத் தொண்டர்களின் சேவை உண்டு; அவ்வாறிருக்கச், சேவைபுரியும் தொண்டர்கட்கு வேறு பாதுகாப்பு என்? அச் சேவையே அவரையுங் காக்குமென்பதாம். காத்தளித்தல் ஒரு சொல். காத்தல் இடர் தடுத்தலெனவும், அளித்தல் நலமுதவலெனவுங் கூறலுமாம். தொண்டர்க்குக் காப்புத் தொண்டே என்பது இதனாற் கூறப்பட்டது.

5. அன்பு நடந்தேற
ஆணவப்புல் தேய்ந்தொழியத்
தொண்டாறு தூய்மை பெறும்.

அன்பென்பது நடந்து செல்ல வழி நெடுக உற்ற ஆணவமாகிய புல் தேய்ந்து கெடத் தொண்டென்னும் நெறி அவ்வாற்றால் தூய்மையடையும்.

தொண்டென்பதிற் செருக்கு முற்றும் நீங்கி அன்புணர்வே யாண்டும் நிகழல் வேண்டுமென்றார். நடந்தேறல், ஒரு சொல் ஆணவத்தின் புன்மை தோன்றப் 'புல்' என்றும், அன்பின் பீடு தோன்ற 'நடந்தேற' வென்றுங் கூறினார். தொண்டென்பதை முன்னே 'பிறவா நெறி' என்றாராகலின் ஈண்டும் அஃது 'ஆறு' எனப்பட்டது. தொண்டு தூய்மையாமாறு இதனாற் கூறினார்.

6. நில நலத்தால் நேரும்
நிறைவிளைவு; நேரும்
யன நலத்தால்
மாந்தர்க்குத் தொண்டு.

நிலத்தது நன்மையினால் நிறைந்த விளைவு உண்டாகும்; அதுபோல, மனத்தது நன்மையினால் மாந்தர்க்குத் தொண்டென்பது நிகழும்.

பண்பட்ட செய்கையே தொண்டெனப்படுதலின், அதற்கு மனத்தது நன்மையைக் காரணமாக்கினார்.

7. வன்கண்மை நீக்க
வழிகாணாய் நெஞ்சமே!
உன்கண்ணே உள்ளதே
தொண்டு.

கொடுங்குணத்தைப் போக்க, நெஞ்சமே! நீ ஒரு வழிகாணுயாய் உள்ளனை; அதற்குரிய வழியாகிய தொண்டு உன்னிடமே உள்ளதே!

கையகத்ததேனும் அதனை அறியாமைஎத்துணைப் பேதைமை யென்றிரங்கினார். ஏகாரங்களுள் முன்னது தேற்றம்; பின்னது இரக்கமாகிய சிறிது பொருள் பயந்து நின்ற அசை நிலை. இவை யிரண்டு பாட்டானும் தொண்டு மாட்சிமைப்படுதற்குரிய காரணம் விளக்கினார்.

8. தொண்டால் பிறர்க்கோ
நலமென்பர் தொண்டொன்றே
கொண்டார்க்குக் கோடி தரும்.

தொண்டினாற் பிறர்க்கு மட்டுமே நன்மை யென்று சொல்லுவர்! அன்று; தொண்டு ஒன்றே தன்னை மேற்கொண்டார்க்கும் அளவிறந்த நன்மைகளைப் பயக்கும் என்பர் உயர்ந்தோர்.

ஓகாரம் எதிர்மறை. ஒன்றே என்று கூறிப் பிரித்தார். கல்வி நிலை முதலிய ஏனைக் காரணங்களில்லாவிடத்தும் பயக்குமென்றற்கு; "கோடியுறும்" என்புழிப் போல. 'கோடி' இங்கும் அளவின்மைக்கு வந்தது. இதனால் தொண்டர்க்குத் தொண்டு தரும் நன்மை கூறப்பட்டது.

9. தொண்டிற் றுணியறம்
மற்றில்லை; இல்லையே
தொண்டரிற் றூயோர் பிற

தொண்டினும் மேலானதாகத் துணியத்தக்க அறம் வேறில்லை; ஆதலின், அது புரியுந் தொண்டரினும் மேலான தூயோரும் வேறில்லை யென்க.

இல்லையே என்னும் ஏகாரம் அசை நிலை. பிற வேறென்னும் பொருட்டாக நின்றது. அறம் அழுக்கினை அறுப்பதாகலின் அஃதுடையோர் தூயோர் எனப் பட்டனர்

10. தொண்டின் பெருமை
துணைக்கூற யார்வல்லார்
தொண்டர்க்குத்தொண்டன்
இறை.

எல்லாம் வல்ல இறைவனே தொண்டு விருப்பால் தொண்டர்க்குத் தொண்டனாய் உளனெனின், தொண்டின் பெருமைக்கு ஓர் அளவு சொல்ல யார் வல்லவர்!

அளவிடல் இயலாதென்பதாம். 'எனின்' என ஒரு சொல் சொல்லெச்சமாய் நின்றது. இவை இரண்டு பாட்டானும்தொண்டின் உயர்வு கூறினார்.

நீத்தார் பெருமை விளக்கம்

நீத்தார் யார்?

1. ஒழுக்கத்தில் நின்றவர்.
2. அளவிலாத பெருமையுடையவர்.
3. இம்மை மறுமை வகை தெரிந்து இங்கே கடமைகள் செய்பவர்.
4. ஐந்து புலன்களையுங் காப்பவர்.
5. புலனடக்கத்தால் ஆற்றல் அமைந்தவர்.
6. அரிய செயல்களைச் செய்பவர்.
7. ஐம்புலன்களின் வகை தெரிந்தவர்.
8. ஆற்றல் நிறைந்த வாக்குடையவர்.
9. குணமுடையவர்.
10. எவ்வுயிர்க்கும் தண்மையாய் இருப்பவர்.

இவர்கள் பெருமை:

நல்ல நூல்கள் இவர்கள் பெருமையையே சிறப்பாகப் பேசும்; உலகம் இவர்களால் பெருமை அடைகின்றது; மேல் உலகங்களிலும் இவர்கள் பெருமை அரும்பி மலர்கின்றது; மேல் உலகத்தாரும் இந்த உலகத்தாரும் இவர்களுக்கு அடக்கம்; இவர்கள் வாக்குகள் வேதம்; இவர்கள் ஆற்றலை எதுவும் தடுக்க முடியாது; இவர்களைப் பார்த்தே மற்றவர்கள் நடக்கத் தெரிந்து கொள்வார்கள்.

நீத்தார் பெயர்:

1. நீத்தார்.
2. துறந்தார்.
3. பெரியார்.
4. அந்தணர்.
5. அறவோர்.

நீதி மொழிகள்:

1. "செயற்கரிய செய்வார் பெரியர்"
2. "அந்தணர் என்போர் அறவோர்"

அறிவுரைகள்:

1. ஒழுக்கத்தால் அவா நீங்கியிரு.
2. பெரியோர் திறங்களில் படிந்திரு; அவைகளை ஆராய்தல் மட்டும் போதாது.
3. இருமைவகை தெரிந்து கடமை செய்.
4. அறிவு உறுதியால் ஐம்புலன் காத்துவா.
5. புலன் அடக்கி வலிமை பெறு.
6. அரிய செயல்களைச் செய்.
7. அடிப்படைக் கூறுகளை ஆராய்ந்து உலகப் பற்றில் ஒழிவு கொள்.
8. குணமலையாய் இரு.
9. குணமுடையோரை எதிர்க்காதே.
10. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகு.
11. பெரியோர் வாக்கை [illegible]னக் கொள்.

12. நல்லவர் என்பதைத் அவர் நன்மொழி கொண்டுத் தெரிந்துகொள்.

கருத்துக்கள்:

1. நூல்கள் பெரியோர் கருத்துக்களையே பரவச் செய்யும் நோக்கங்கொண் டிருக்க வேண்டும்.

2. பிறந்தவர் இத்தனை என்று எண்ணுவதைவிட இறந்தவர் இத்தனை என்று எண்ணுவது கடினம்.

3. உலகத்தில் உயர்ந்தது தொண்டர் உள்ளமே.

4. விடுதலைக்கும் உரிமைக்கும் தொண்டர்கள் செய்கையே வித்து.

5. துறவோர் பெருமைக்கு மழையே சான்று.

6. விண்ணுலகத்தவர் ஆற்றலைவிடப் புலனடக்கமுடையவர் ஆற்றல் மிகவும் பெரிது.

7. பெரியோர் என்றால் அவர்கள் அரிய பெரிய காரியங்களை உலகுக்குச் செய்வார்கள். அப்படிச் செய்யாதவர்கள் மற்ற நிலைகளில் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் சிறியவர்களே!

8. ஐம்புலன்களைக் கட்டுப்படுத்துவதென்றால் வகை தெரிந்து அவற்றைக் கையாள்வது என்பதே கருத்தாகும்.

9. புலன்களை வகை தெரிந்து கையாண்டால், உலகம் அவர்களுக்கு அடக்கமாகும்; இவ்வுலக ஆட்சியும் மறுவுலக ஆட்சியும் அவர்களுக்கே உண்டாகும்.

10. பெரியவர்கள் என்றால் அருள் நிறைந்த வாக்கும் பெற்றிருப்பார்கள். அவர்கள் வாக்கு செல்வாக்காக இருக்கும், அவர்கள் நினைப்பதை அவர்கள் வாக்கே நிறைவேற்றிவிடும்.

11. பெரியவர்கள் வாய்ச் சொல் அப்படியே பலித்துவிடும்.

12. இலக்கண இலக்கிய சாத்திர தர்க்க அருள் அழகுகளும் கவிதை அழகுகளும் பெரியோர் வாக்குகளிற் குறைவில்லாமலிருக்கும்.

13. சான்றோர் வாக்குகள் முக்கால உண்மைகளும் உடையவை.

14. சான்றோர் வாக்குகள் காரியசித்தி உடையவை.

15. பெரியோர் வாக்குகள் வாய்தப்பி வந்தாலும் பலித்தே விடும்.

16. அவர்கள் வாக்குகளில் முகமன் இராது; அவற்றில் உண்மைத் தன்மையே விளங்கும்.

17. நீத்தாருக்கு ஒரு பெருமை உண்டென்றால், அது குணப் பெருமைதான்.

18. எவ்வளவு இடையூறுகள் நேர்ந்தாலும் நற் குணத்திலிருந்து அவர்கள் வழுவ மாட்டார்கள்.

19. பிறர் வழுவும்போது அவர்களுக்குக் கோபம் வரும். ஆனால், நொடிப் பொழுதில் அது மாறிவிடும். ஆயினும், உடனே தன் பயனைக் காட்டிவிடும்.

20. பெரியோர் நினைவு சொல் செயல் எல்லாம் அறவுருவமாயிருக்கும்.

21. நல்லவர்களையே பெரியோர் அந்தணர் என்று சொல்வது வழக்கம்.

22. எல்லா உயிர்களிடத்திலும் பெரியோர் குளிர்ச்சியாகவும் நன்மையாகவும் கருணையுடன் இருப்பர்.

23. எல்லா உயிர்களுக்கும் எப்போதும் ஏதாவது இதமானவைகளைப் பெரியோர் செய்தபடியே இருப்பர்.

24. பெரியோரிடம் வஞ்சனை, ஓர வஞ்சனை, இல்லை.

25. பிற வுயிர்களுக்காகவே பெரியவர்கள் உலகத்தில் வாழ்வார்கள்.

26. அடியார்கள் எந்நாளும் தம் கடைமையிலிருந்து தவற மாட்டார்கள்; ஏதாவது உலகத் தொண்டு செய்தபடியே இருப்பார்கள்.

27. அவர்கள் செய்யும் உலகத் தொண்டு உயிர்களின் பிறவியை ஈடேற்றும் நோக்கமுடையதாய், உலகியலோடு ஒத்ததாய், இருக்கும்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் பாவிப்பதன்று. உள் உடம்புகளின் மொத்த சமூகமே உள்ளம். உள்ளம் இதயத்தின் தொடர்பு உடையது. இதய பாவனை இல்லாவிடில் உயிர் என்பதே இல்லை. பாவனை இல்லாதவர் செத்தவரேயாவர். எதன் மேல் நாம் அன்பு கொள்ளுகிறோமோ அது நம் இதயத்தில் குடிகொண்டுவிடுகிறது. இம் மாதிரியே பெருமானை இதய பாவனையில் பாவித்தால் பாவனாதீதனான பெருமான் நம் உள்ளக் குகையில் புகுந்துவிடுவார். புகுந்தவன் மந்திரமாக மாறுவான். இப்படி மாறுவதற்கு மந்திரத்தோடு கூடிய செயலும் ஒத்தாசை புரிகின்றது. தெய்வ நிலைக்குமட்டும் இன்றி மற்றவைகளிலும் இப்படியே மாறலாம். ஒரு துரும்பை எடுத்து வாளாகப்பாவித்து வீசினால்ஒளி உருவத்தால் வாள்போல வேலை செய்யும். ஒலியே ஒளியையும் கொடுக்குமாதலின் கையினால் பிடிக்கத்தகுந்த வாளாகவும் இருக்கும். கற்பின் காரணமாக ஆழ்ந்து பாவிக்கத் தெரிந்த வாசுகி மண்சோறு சமைத்தாள்.

(வரும்)

—சோமசுந்தரம்.

அம்பலவாணர்

(சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தில் திருவாதிரை நாள் 24.10-50 அன்று ஆசிரியரால் அருளப் பெற்றது).

(முன் தொடர்ச்சி)

அவனிடம் போகாது இடையில் மாயா சக்தியிலேயே தங்கிவிட்டால் பக்குவம் பெறு நிலையில் இருப்பவராவோம். அழகான உடம்பைக் காண்கிறோம். அது முதலில் இன்பங் கொடுத்துப் பின்னர்த் துன்பத்தையும் கொடுக்கிறது. துன்பம் அறிவைக் கிளறவைக்கிறது. மீண்டும் மீண்டும் துன்பப்பட, அப்பொருளை விட்டுத் தாண்டி வா, வா என அழைத்துக் கொண்டுபோய் மெய்யருளாந் தாயாகக் காட்சியளிக்கிறாள்; நாதனே தாயாக இருந்தேன், அழகிய மனைவியாகவும் இருந்தேன் என இரண்டும் பராசக்தியின் வடிவமே எனக் காட்டுகிறாள். தூய சிவசக்தியே இரு நிலையிலும் வேலை செய்கிறது. முன்னைய நிலையில் கலைத் தாயாகவும் பின்னைய நிலையில் அருள் தாயாகவும் வேலை செய்கிறாள். ய வாகிய ஆன்மா இரண்டு நிலைகளிலும் தோய்ந்த மாதிரி இருக்கிறது. மெய்யருள் தாயே ஆன்மாவை அழுக்கினின்றும் எடுத்துத் தூய்மையாக்கி அப்பனிடம் கொடுக்கும். அழுக்கில் வாழும் நாம் நம என்னும் மாயையை விட்டு நீங்கி அருளுக்கு வந்து சிவத்தினிடத்துப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். மாயா சக்தியிலிருந்து சிவசத்திக்குப் போய் அருளுக்கு வந்து சிவத்திற்குப் போகும் நிலையில் முன்னேறவேணடும். சாதாரண இன்பங்களெல்லாம் கலை இன்பம். முற்றிலும் அறியாமையில் இருப்பவரைச் சிறிது கிளர வைத்து அறிவைக் கொடுக்கும். இவைகளில் நாதம் எவ்வளவோ கிளர்ச்சியை உண்டு பண்ணும். இதனால்தான் சம்பந்தர் பாடல்களினால் கிளர்ச்சியை உண்டுபண்ணினார்.

மாயநட் டோரையு மாயா மலமெனு
மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே
புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக்
கூடிப்பின் றாயை மறந்
தேயுமதே நிட்டை யென்றா னெழிற்
கச்சி யேகம்பனே.

அழுக்குற்றவை நீங்கி அம்பிகையோடு சேர்ந்து, பிறகு அப்பனோடு சேர அம்பிகையையும் மறப்பதே நிட்டை எனப் பட்டினத்தடிகள் கூறுகிறார். தாயை மறப்பது என்பது, இக்காலத்தவர் போல, பிற சுகங்களினாலோ மற்ற எக் காரணங்களாலோ மறப்பது என்பது இல்லை. ஒரே நெறியில் போகும் ஒரே நினைவின் காரணமாக அனைத்தையும் மறப்பதாகும்.

மண் கீழே இருக்கிறது. நாதம் மேலே இருக்கிறது. தத்துவங்களின் முடியாகிய நாதத்திலிருந்துகொண்டு நாதத்தால் நடராஜர் வேலை செய்கிறார். மற்றவர்களோ தத்துவங்களின் இடையில் இருந்துகொண்டு தத்துவங்களாலேயே வேலை செய்வர். புழு மண்ணுக்குக் கீழே இருக்கிறது. நாம் மண்ணுக்கு மேலே இருக்கிறோம். இதுபோல் எல்லாத் தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவரே கடவுள். அவரே நமக்காக இரக்கத்தின் காரணமாகக் கருணை கூர்ந்து வேலை செய்ய வந்தால் பஞ்சாட்சரமாகிய நாதத்திற்கு வந்து நடராஜர் என்னும் நிலையில் வேலை செய்கிறார். இவர் உருவமும் பஞ்சாட்சரம். இவர் செயலும் பஞ்சாட்சரம். ஆதலால் பஞ்சாட்சரத்தாலேயே அவர் செயல்களைத் தோற்றுவிக்கலாம். நமக்கு உதவி செய்கிறவர் நம்மைப்போல இருப்பவராகவே எதிர்பார்ப்போம். மனிதர் மனிதர்களால்தான் உதவி பெறமுடியும். இதுபோல நடராஜர் செயல்களைச் செய்ய நடராஜராக மாற வேண்டும். ஒன்றைப் பலகாலும் நினைந்து நினைந்து எப்படிப் பாவிக்கிறோமோ அதுபோலவே நாமும் மாறலாம். பாவிப்பதனாலேயே எதுவும் கிட்டும். பாம்பின் நஞ்சைப் போக்க 'நாம் கருட உருவம் எடுக்க வேண்டும்' என்பது ஆற்றல் உள்ளவருக்கே முடியும். இது மந்திர உருவம்; பாவிப்பதற்கு மந்திரம் தேவையாக இருக்கிறது, இம் மந்திரத்தோடு சில கிரியைகளையும் செய்ய வேண்டும்.

இப்போது உள்ள நம் பாவனை கிரியையோடு கூடிய நாத வடிவமாக மாறுவதாகும். மண்ணை மாறுவது நம் பாவனையன்று. சொற்பொழிவு செய்பவர், கீழ்ப் பொருள்களை விட்டு அர்த்த புஷ்டியோடு, கருத்து நிறைவோடு, பாவனைப் புஷ்டியோடு பேசுகிறார். பேசுகிறவர் இந்நிலையிலிருந்து பேசினால்தான் மெய்ப்பொருள் வரும். வாக்கால் செய்யக்கூடியது மந்திரம். கிரியை உடம்பால் செய்யக்கூடியது. பாவனையோ இதயத்தோடு ஒன்றியது. இப் பாவனை உள்ளத்தால் பாவிப்பது. மனத்தால்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம் குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)